**தலைப்பு 111 – சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 111 – சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்துவதற்கான முற்பணக்கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 08 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கலகள் மாதிரிகளது போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, கலைத்தலுக்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிச்செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணிச்செல்லல் பொறுப்பில் இப் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 148,164.43 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 130,241.69 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 17,922.74 மில்லியன் அல்லது 12.1 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடுகள் | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| மீண்டெழும் | 109,446.25 | 100,754.15 | 8,692.10 | 7.94 |
| மூலதனம் | 38,718.18 | 29,487.54 | 9,230.64 | 23.84 |
| **மொத்தம்** | **148,164.43** | **130,241.69** | **17,922.74** | **12.10** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2015 ஆம் ஆண்டிற்காக 10.03.07.01 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 168.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 93.51 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 55.7 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 11101 ஆம் விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1,270.00 | 1,229.69 | 980.00 | 1,055.49 | 2,500.00 | 1,583.99 |

## 2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழான 02 கட்டுநிதிக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 252.38 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0100/0015/000 | 160.73 |
| 7003/0000/00/0014/0015/000 | 91.65 |
| **மொத்தம்** | **252.38** |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 09 பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 759.25 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0001/0026/000 | 2.43 |
| 6000/0000/00/0002/0027/000 | 2.93 |
| 6000/0000/00/0015/0024/000 | 0.04 |
| 6000/0000/00/0001/0111/000 | 15.53 |
| 6000/0000/00/0002/0155/000 | 24.35 |
| 6000/0000/00/0013/0108/000 | 168.63 |
| 6000/0000/00/0016/0099/000 | 518.38 |
| 6000/0000/00/0018/0102/000 | 18.49 |
| 6000/0000/00/0019/0024/000 | 8.48 |
| **மொத்தம்** | **759.25** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, முற்பண செயற்பாட்டின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் பின்வரும் இரண்டு முற்பண செயற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் முற்பணக் கணக்குகள் 2004 நவம்பர் 30 ஆந் திகதியளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அந்த இரு கணக்குகளும் 2016 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| விடய இலக்கம் | கணக்கின் பெயர் | தாமதம் வருடங்கள் |
|---|---|---|
| 34003 | அங்கொடை மனநோய் வைத்தியசாலையின் தொழில்சார் சிகிச்சை முற்பண செயற்பாட்டின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் முற்பணக் கணக்கு | 11 |
| 34004 | அங்கொடை மற்றும் முல்லேரியா மனநோய் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் பயன்பாட்டிற்கான வெதுப்பக முற்பண செயற்பாட்டின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் முற்பணக் கணக்கு | 11 |

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணப்படாமை

அமைச்சு மற்றும் அதன் கீழான மருத்துவமனைகளால் பின்வரும் சில ஏடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அமைச்சினால் நிலையானச் சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காததுடன், 08 மருத்துவமனைகள் நிலையானச் சொத்துப் பதிவேடொன்றை பேணி இருக்கவில்லை. |
| (ஆ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ/ஏ/ஐ/02/2002 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | அமைச்சு மற்றும் அதன் கீழான 08 மருத்துவமனைகளால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | அமைச்சு மற்றும் அதன் கீழான 02 மருத்துவமனைகளால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | அமைச்சு மற்றும் அதன் கீழான 09 மருத்துவமனைகளால் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வாகனப் நிரற்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | அமைச்சு மற்றும் 04 மருத்துவமனைகள் வாகன நிரற்படுத்தும் பதிவேட்டினை பேணியிருக்கவில்லை. |

### 3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம் பணிகளை முடிவுறுத்தாத அமைச்சிற்குரிய ரூபா 795,976 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று தொலைந்து போயிருந்தது.

(ஆ) 40 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக மீளாய்வாண்டிலும் கடந்த 04 ஆண்டுகளுக்காகவும் மொத்தமாக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 36,704.04 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 30,415.33 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிர்மாண ஒப்பந்தம் தொடர்பில் போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 21 கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 25 கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் 2016 திசெம்பர் 08 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிட கூடியதாக இருந்த கொடுக்கல் வாங்கல்களிற்குரிய பெறுமதி ரூபா 26,150.70 மில்லியன் ஆகும்.

### 3.5 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### 3.5.1 மூலதன நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை

நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தாமதமின்றி கடன் உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கும் பெறுகைகள் நடைமுறையை பூர்த்தி செய்யவும் முடியாத காரணத்தால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுதல் தாமதமடைதல் அத்துடன் திட்டங்களை தயாரிப்பதில் தாமதம் ஏற்படல் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திறனாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்றவற்றின் காரணத்தால் மீளாய்வாண்டில் 28 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,041 மில்லியன் மூலதன நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கடந்த 4 வருடங்களினுள் 98 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 18,725 மில்லியன் கூட்டுத்தொகையான மூலதன நிதியேற்பாடும் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. இந்த ஒட்டுமொத்த சேமிப்புகளிலிருந்து ரூபா 19,544 மில்லியன் நிர்மாணங்களுக்காகவும், ரூபா 2,237 மில்லியன் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும், ரூபா 985 மில்லியன் ஏனைய சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடாகும்.

#### 3.5.2 வெளிநாட்டு நிதி மற்றும் மீளளிப்பு செய்யப்படும் வெளிநாட்டுக் கடனின் குறைப்பயன்பாடு

---

மீளாய்வாண்டின் மூலதன செலவினத்தின் நிதியீட்டத்திற்காக ரூபா 19,924 மில்லியன் உள்நாட்டு நிதிகளும் ரூபா 11,460 மில்லியன் வெளிநாட்டு கடனும் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் முறையே 85 சதவீதம் மற்றும் 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மூலதன செலவினத்தின் நிதியீட்டத்திற்காக ஏற்பாடு

செய்யப்பட்டிருந்த ரூபா 3,656 மில்லியன் வெளிநாட்டு மானியம் மற்றும் மீளளிப்பு செய்யப்படும் ரூபா 1,765 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு கடன் ஆகியவற்றிலிருந்து முறையே 17 சதவீதம் மற்றும் 29 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அடையக்கூடிய வருடாந்த இலக்கினை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு மானியங்கள் மற்றும் மீளளிப்பு செய்யக்கூடிய வெளிநாட்டு கடன் மூலங்களைக் கொண்ட மூலதன செயற்திட்டங்களின் மதிப்பீடுகளைத் தயாரிக்காமை மற்றும் குறித்துரைக்கப்பட்ட கால வரையறையுடனான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

## 3.6 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 1997 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 362,702 தொகையான கட்டுநிதி மீதி 2016 திசெம்பர் 27 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தது. அமைச்சினால் 131 சந்தர்ப்பங்களில் 62 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 915,581 கூட்டுத்தொகையான உபகட்டுநிதி செயற்பாடு நிறைவடைந்து 01 முதல் 11 மாதங்கள் வரையான கால வீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும், உப கட்டுநிதி வழங்கப்பட்டு 08 முதல் 20 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த 38 சந்தர்ப்பங்களில் 27 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 577,203 கூட்டுத்தொகை மற்றும் 17 சந்தர்ப்பங்களில் ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 64,340 தொகையான உப கட்டுநிதிகள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 244/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2.7 ஆம் பந்தியில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் பழைய வைப்புக் கணக்கில் தற்போது காணப்படும் மீதிகளை வைப்புக்களின் வகைகளுக்கமைய வெவ்வேறு வைப்புத் தொகுதிகளுக்கு மாற்றப்பட்டு அல்லது அவ்வாறு மாற்றுவதற்கு தேவையற்ற வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைத்து அல்லது 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பழைய கணக்கு வைப்புக்களை தீர்ப்பனவு செய்து முடிக்க வேண்டியதாக இருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 5,398,031 கூட்டுத்தொகையான வைப்புக்களுடன் கூடிய பழைய 03 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளை தீர்த்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 65,869,737 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

11101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2, 4.4, 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 44,297,166 கூட்டுத்தொகையான நிலுவைக்கடன் மீதிகளை அறவிட தவறியிருந்தது. அவற்றுள் 5 வருடங்களுக்கு கூடிய நாட்கள் கடந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 19,254,836 ஆக இருந்தது.

### 3.9 கலைத்தலுக்கான முற்பணக் கணக்கு

2004 ஒக்தோபர் 01 ஆந் திகதிய அ.ம.ப 04/1121/008/036 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 34003 மற்றும் 34004 ஆம் இலக்க முற்பண கணக்கு விடயங்களின் கலைப்பு நடவடிக்கைகள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. அக் கலைத்தல் நடவடிக்கைகள் 2004 நவம்பர் 30 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. எனினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வரை 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அக் கலைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த 2 முற்பணக் கணக்குகளுக்குரியதாக 11 வருடங்கள் கடந்திருந்த ரூபா 3,450,843 தொகையான அறவிடப்பட வேண்டிய மற்றும் ரூபா 89,841 தொகையான தீர்க்கப்பட வேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 667,091 பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்டிராத சொத்துக்களும் காணப்பட்டன.

### 3.10 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.10.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் நான்கு மாத தாமதத்தின் பின்னர் 2015 ஏப்ரல் 27 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 மருத்துவமனைகளுக்காக மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 15 மருத்துவமனைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டங்களுக்கு மேற்படி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாடுகளுக்கான திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 14 மருத்துவமனைகளுக்காக மீளாய்வாண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட்டு வேலைகள், வழங்குபொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திலிருந்து ரூபா 38,718.18 மில்லியன் தொகையான மூலதன நிதியேற்பாடு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் கொள்வனவுத் திட்டம் வருடம் ஆரம்பித்து 02 மாதங்களின் பின்னர் 2015 மார்ச் 01 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தமையால் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

(ஆ) கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருந்த 2015 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணிகள் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

(i) பெறுகைகள் கையேட்டின் 4.2.1 இல் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்காக இந்த பிரிவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 4,168 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 7,424 மில்லியன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் கொண்ட 10,538 உபகரணங்கள் 196 சந்தர்ப்பங்களில் நிதியேற்பாடுகளை விஞ்சி கொள்வனவு செய்யும் நடைமுறைக்கு புறம்பான திட்டமொன்று பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iii) கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 7,424 மில்லியன் மொத்தக்கிரயமான 10,538 உபகரணங்களிடையே ரூபா 592 மில்லியன் மொத்தக்கிரயமான 1,279 உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அடையப்பட்டிருந்த இலக்கானது உத்தேசிக்கப்பட்ட கிரயத்தில் 8 சதவீதம் மாத்திரமேயாகும். எனினும், பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத ரூபா 2,265 மில்லியன் மொத்தக்கிரயமான 3,525 உபகரணங்கள் 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பெறுகைகள் திட்டத்திற்கு இணங்காத பாரியளவிலான கொள்வனவுகள் இடம்பெறுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

(இ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், 12 மருத்துவமனைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்ட பெறுகைகள் கைநூலின் 4.2.1 இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 15 மருத்துவமனைகளின் பெறுகைகள் நடைமுறைகளின் முன்னேற்றத்தைக் காட்டும் செயன்முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், கடந்த ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் செயலாற்றல் அறிக்கைகள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10.4 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், அமைச்சு மற்றும் அதன் கீழான மருத்துவமனைகள் மற்றும் 127 நிறுவனங்கள் மற்றும் 19 வெளிநாட்டு செயற்திட்டங்களில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது. எனினும் மீளாய்வாண்டு உள்ளடங்கலாக கடந்த 05 வருடங்களில் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த கணக்காய்வு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 10 முதல் 15 வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. எனினும் மேற்படி பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு உள்ளடங்கலாக கடந்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு 24 முதல் 55 விசேட கணக்காய்வு பரிசோதனைகள் வரையான வீச்சளவில் இடம்பெற்றிருந்த போதிலும் ஆண்டொன்றிற்கு மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களில் 12 முதல் 28 வரையான வீச்சுடைய எண்ணிக்கையானவற்றில் மாத்திரம் பாரம்பரிய கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளவாறு காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்கள் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **ரிட்ச்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனை** | | | |
| – சலவை இயந்திரம் | 01 | கிரயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 25 வருடங்களாக |
| – துணி அழுத்தும் இயந்திரம் | 01 | -மேற்படி- | -மேற்படி- |
| – புரொயிளர் | 01 | -மேற்படி- | -மேற்படி- |
| **தேசிய மனநல கல்வியியற் கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டிடம்** | 01 | -மேற்படி- | 20 வருடங்களுக்கு மேலாக |

| | | | |
|---|---|---|---|
| **காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் மருத்துவ உபகரணங்கள்** | 48 | 131,000 | 4 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையான காலமாக |
| **நுவரெலியா பொது வைத்தியசாலையின் பிணியாளர் காவும் வண்டி** | 01 | 1,200,000 | 04 மாதங்களாக |
| **கண்டி பொது வைத்தியசாலை** | | | |
| – வேன் வண்டி | 01 | 800,000 | 1 வருடமாக |
| – பிணியாளர் காவும் வண்டி | 01 | 400,000 | 4 வருடங்களாக |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அமைச்சு உள்ளடங்களாக அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் 128 நிறுவனங்களில் 49 நிறுவனங்களுக்குரிய அந்த அறிக்கைகள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) 2015 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பில் பொழிப்பாக்கப்பட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மிகையினை புத்தகங்களுக்கு எடுப்பதற்கும் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 101, 103, 104, 105 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குமான முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்படுள்ளன.

(i) முறைப்படி கைதவிர்க்கப்படாத 11 வாகனங்கள் 2002, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தொழில் பயிற்சி நிறுவனத்திற்கு பழுதடைந்த வாகனங்களாக விடுவிக்கப்பட்டிருந்ததாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சின் பெயரிலான பதிவு இரத்துச் செய்யப்படாதிருந்ததுடன், வாகனங்கள் உரிய நிறுவனங்களுக்கு கிடைத்ததாக அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) 10 வாகனங்களின் பயன்பாட்டு உரித்து 05 வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் சட்டரீதியான உரித்தினை அந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சொத்துக்கள் கைத்தவிர்க்கப்படாமை மற்றும் முறையற்ற விதத்தில் கைத்தவிர்ப்பு செய்யப்படல்**

வடக்கு கிழக்கு யுத்தத்தின் போது காணாமல் போனதாக பொலிசிற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த 11 வாகனங்களின் சட்டரீதியான உரித்து அமைச்சின் வசமிருப்பது வெளிப்படுத்தப்பட்டது. இவ் வானங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கும் ஏதேனும் முறைகேடுகள் அல்லது மோசடிகளோ மேற்கொள்ள முடியாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) காணாமல் போன சொத்துக்கள்**

அமைச்சிடம் சட்டரீதியான உரித்துக் காணப்பட்ட 752 வாகனங்கள் மற்றும் 3,134 மோட்டார் சைக்கிள்கள் அமைச்சின் வாகன குழாமில் பௌதீக ரீதியாக காணப்படாமை கண்டறியப்பட்டது. அவ்வாகனங்கள் கைதவிர்க்கப்பட்டதா அல்லது அவ்வாறில்லையெனின் தற்போது காணப்படும் இடங்களோ அல்லது எத்தரப்பினரால் தற்போது பயன்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பாக நிச்சயமான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**(ஊ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்கள் ரூபா 6,068.22 மில்லியன் ஆகும்.

(ii) நிதிப்பிரமாணம் 94 (1) இற்கு முரணாக செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பை விஞ்சி ரூபா 350.27 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) அரச கூட்டுத்தாபனத்தினால் விநியோகிக்கப்பட்டிருந்த மருந்து வழங்களுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 4,003.25 மில்லியனாக இருந்தது. கூட்டுத்தாபனத்திற்குரிய நிதிக்கூற்றுக்களில் அந்த பொறுப்புக்கள் ரூபா 4,176,88 மில்லியனாக உறுதி செய்யப்பட்டது. அதன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 173.63 மில்லியன் வேறுபாடு தொடர்பில் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.12 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மைகள்**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| **(அ) சட்டரீதியான ஏற்பாடுகள்** | |
| (i) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டதின் 2, 8 மற்றும் 12 ஆம் பிரிவுகள் | ஒப்பந்தமொன்றின் மதிப்பிடப்பட்ட கிரயம் அல்லது ஒப்பந்தக் கிரயம் ரூபா ஐம்பது இலட்சத்தை விஞ்சும் சந்தர்ப்பமொன்றில் குறித்த தகவல்கள் பொது ஒப்பந்த பதிவாளருக்கு சமர்ப்பித்து ஒப்பந்ததாரரால் ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டதாக சான்றிதழொன்றை சமர்ப்பிக்காத ஒப்பந்ததாரருடன் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட கூடாதெனினும், சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் ஒப்பந்த உடன்படிக்கை பெறுமதி ரூபா 120.60 மில்லியன் கூட்டுத்தொகையான 08 ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்கள் தொடர்பில் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | |
| XII ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவு | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி அமைச்சுடன் இணைந்ததாக சேவை புரியும் மூன்று வைத்தியர்கள் மீளாய்வாண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் பிரத்தியேக சுற்றுலாக்களுக்காக வெளிநாடு சென்றிருந்தனர். அவர்களுள் ஒரு வைத்தியர் வெளிநாட்டில் இருந்த காலப்பகுதியினுள் கராப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் கடமை புரிந்ததாக தகவல் வழங்கி மேலதிக நேர படிகள் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்களாக ரூபா 8,838 தொகையினை பெற்றுக்கொண்டிருந்தனர். |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 396 (ஈ) | 25 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 2,484,972 கூட்டுப்பெறுமதியான வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான 122 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 751 | 10 மருத்துவமனைகளுக்கு வெகுமதியாக கிடைத்த 832 இருப்பு விடயங்கள் இருப்பு பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) பொது நிதிச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| (i) 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க சுற்றறிக்கை | டிலி, திமோர் லெசதோ அரசில் (கிழக்கு திமோர்) 2015 செப்தம்பர் 7 ஆந் திகதி முதல் 2015 செப்தம்பர் 11 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் நடாத்தப்பட்டிருந்த 68 ஆவது உலக சுகாதார அமைப்பின் வலய மாநாட்டிற்கு பங்குபற்றுவதற்கும் 2015 யூன் 29 ஆந் திகதி முதல் 2015 யூலை 10 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் சிங்கப்பூரில் இடம்பெற்ற பாடநெறிகளில் பங்குபற்றுவதற்காக ரூபா 3,460,136 கூட்டுத்தொகை சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அரச நிறுவனங்களில் கொள்வனவு செய்யாமல் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து விமான பயணச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க மற்றும் 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014(I) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2015 செப்தம்பர் 10 ஆந் திகதிய NCP/9/1/30 ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் ஆணைக் குழுச் செயலாளரின் கடிதம். | முதலாம் நிலை மற்றும் II ஆம் தரத்திலான வைத்திய உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொடர்பாடல் படிகளாக ரூபா 2,500 செலுத்த முடியும் எனினும், அதற்காக ரூபா 4,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் மாத்திரம் 12,176 உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த தொடர்பாடல் படிகள் ரூபா 219.17 மில்லியன் ஆகும். |
| (iii) 2015 மே 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் தகுதி, அறிவு மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக வெளிநாடு சென்ற இரு உத்தியோகத்தர்களுக்கான அமைய செலவினங்களை செலுத்தும் போது உத்தியோகபூர்வ தூதரக பணிகள் அல்லது நாட்டினுள் பூர்த்தி செய்ய முடியாத நிறுவனமொன்றின் நோக்கெல்லைக்குரிய கடமையாக கருதி அமைய செலவுகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 42,997 தொகையான அமைய படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன. |

**(உ) பொது நிர்வாக சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை. | அமைச்சு உள்ளடங்களாக அதன் கீழான மருத்துவமனைகள் மற்றும் 128 நிறுவனங்களில் கைவிரலடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

**3.13 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது ரூபா 17,869.33 மில்லியன் வெளிநாட்டு நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 65,134.28 மில்லியன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமுடைய 19 செயற்திட்டங்களுக்காக ரூபா 11,210.86 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த 19 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் 03 செயற்திட்ட மாதிரிகளின் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **இலங்கை தேசிய வைத்தியசாலையின் 08 மாடிகளைக் கொண்ட வலிப்பு நோய் அலகினை தாபித்தல் மற்றும் நாடு முழுவதும் வலிப்பு நோய் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் செயற்திட்டம்.**

---

மேற்குறிப்பிட்ட செயற்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) இந்த செயற்திட்டத்திற்காக சவூதி ரியால் 281.25 மில்லியன் வெளிநாட்டு கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தில் சவூதி ரியால் 32 மில்லியன் அல்லது ரூபா 969.8 மில்லியன் நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி 08 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணி நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. இதற்காக ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்வதற்காக சவூதி அபிவிருத்தி நிதிய வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 விலைமனுக்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியிருப்பினும், 02 விலைமனுக்களை மாத்திரம் பரிசீலித்து கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான நிலத்தை துளையிடும் பணிக்காக ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதற்கு மேலதிகமாக கேள்விதாரரின் முன் தகுதிகளை பரிட்சித்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) நிலத்தை துளையிடல் மற்றும் நிலத்தை துளையிட்டு கொங்கிரீட் இடும் பணிகள் ஆகியவற்றுக்கான பொறியியலாளர் மதிப்பீடானது ரூபா 75.48 மில்லியனாக இருந்ததுடன், அதனை விட 21 சதவீதம் அதிகமான அல்லது ரூபா 91.37 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டலுக்கமைய கட்டிடத்தின் நிர்மாண பணிகளுக்காக மொத்தக்கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 01 பில்லியன் மற்றும் ஒப்பந்தக்காலம் 18 மாதங்கள் என மதிப்பிடப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும் பெறப்பட்ட 05 விலைமனுக்களை மதிப்பாய்வு செய்யும் சந்தர்ப்பத்தின் போது அந்த பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 1.8 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டு, ஒப்பந்தக்காலமானது 12 மாதங்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும் பொறியியலாளர் மதிப்பீட்டினை 80 சதவீதத்தால் அதிகரிக்கவும் ஒப்பந்தக் காலத்தை 6 மாதங்களால் குறைப்பதற்கும் காரணமாக அமைந்த விடயங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இரண்டாம் முறையாக தயாரிக்கப்பட்டிருந்த பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 1.8 மில்லியனுக்கு அண்மிய அல்லது ரூபா 1,793.45 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு 2013 மே 31 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.13 ஆம் வழிகாட்டலுக்கமைய விலைக்கேள்வி பிணைப்பொறுப்பு மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையான பெறுமானத்தை கொண்டிருக்க வேண்டும். ஆகையால் ரூபா 18 மில்லியனுக்கு ஆகக்குறைந்த விலை கேள்வி பிணைப்பொறுப்பொன்றை பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் ரூபா 10 மில்லியன் விலைக்கேள்வி பிணைப்பொறுப்பொன்று மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(v) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2014 ஏப்ரல் 03 ஆந் திகதியளவில் ஒப்பந்தத்தின் பணிகள் பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதிலும், அத் திகதியளவிலான நிதி முன்னேற்றம் ரூபா 309.39 மில்லியன் அல்லது ரூபா 17 சதவீதம் மாத்திரமேயாகும். 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதன் நிதிசார் செயன்முன்னேற்றம் ரூபா 1,128.05 மில்லியன் அல்லது 63 சதவீதம்

மாத்திரமேயாகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் தாமதக் காலம் 637 நாட்களாக இருந்த போதிலும், உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ஆகக்கூடியது ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீதம் அல்லது ரூபா 179.34 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) கட்டிடத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சவூதி ரியால் 35.5 மில்லியன் தொகை கட்டிட நிர்மாணத்திற்கென செலவிடப்பட்டிருந்தமையால் உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாது போயிருந்தது.

(vii) செயற்திட்டத் தாமதத்தின் காரணமாக கட்டிடத்தின் நிர்மாண மற்றும் மதியுரைச் சேவைகளுக்காக மதிப்பிடப்பட்ட கிரயத்தை விட உள்ளபடியான செலவினம் ரூபா 977.39 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(viii) முதலாவது செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணைகளை மீளச் செலுத்தும் சலுகைக் காலம் 05 வருடங்களாக இருந்தமையால் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் இலங்கை அரசினால் கடன் தவணைகளாக ரூபா 401.69 மில்லியனும், செயற்திட்டத்தின் தொடக்கம் முதல் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் கடனுக்கான வட்டியாக ரூபா 85.68 மில்லியன் சவூதி அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட தாமதத்தின் காரணமாக அதன் நலன்களை அடைய முடியாதிருந்தது.

(ix) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டப் பதவியணியின் செயலாற்றலை மதிப்பாய்வு செய்யாமல் நியமனக் காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டப் பணிப்பாளர் பதவியும் 2012 பெப்ரவரி 20 ஆந் திகதியிலிருந்து 2016 திசெம்பர் 08 ஆந் திகதி வரை பதிற்கடமை நியமனமொன்றினால் மேவுகை செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அசாதாரணமானதொரு செயற்திட்ட தாமதம் தொடர்பில் செயற்திட்டப் பணிப்பாளடரிமிருந்து மிகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) காலி மாஹமோதர தாய் சேய் வைத்தியசாலையை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள்**

---

2005 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தின் அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டதன் பின்னர் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந் நிர்மாணங்களுக்குரிய நிதி ஏற்பாடு கிடைத்த முறை, கிடைத்த நிதியேற்பாட்டின் அளவு, மொத்த கிரய மதிப்பீடு, பொறியியலாளர் மதிப்பீடு, ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்தல் என்பவற்றிற்காக பின்பற்றப்பட்ட கொள்வனவு முறைமை, ஒப்பந்தப் பெறுமதி, உடன்படிக்கை, திட்டம் மற்றும் சித்திரக் குறிப்புக்கள், ஒப்பந்தக்காரருக்கு பணக் கொடுப்பனவு செய்தமை தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவினை அதிகரிக்கும் செயற்திட்டம்**

---

கட்டிட நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக இரு கூறுகளின் கீழ் ஜெயிக்கா கடன் உதவியினை பெற்று ரூபா 1,777.13 மில்லியன் கிரயமான அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவினை அதிகரிக்கும் செயற்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 1,993.1 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி முன்னேற்றம் ரூபா 160.7 மில்லியன் மாத்திரமேயாகும். 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவுகள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளுக்கான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு நாணயக்கடிதத்தினை திறப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதியளவில் உபகரணங்களுக்கான விலைக்கேள்விகள் மதிப்பீடு செய்யப்பட்டவாறு இருந்ததுடன், நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

---

### 3.14.1 மருத்துவ விநியோகப் பிரிவிற்காக முல்லேரியாவில் மருந்துக் களஞ்சியமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

---

மருத்துவ விநியோகப் பிரிவிற்காக முல்லேரியாவில் மருந்துக் களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்கு 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 65.79 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மொத்தக்கிரய மதிப்பீடு ரூபா 175.99 மில்லியனாக இருந்தது. 2008 செப்தம்பர் 28 ஆந் திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2009 ஒக்தோபர் 10 ஆந் திகதியளவில் பணிகளை பூர்த்தி செய்யும் ஒருங்கிணைப்பாட்டின் அடிப்படையில் ரூபா 125.38 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாண நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரால் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அது வரையிலும் விலைத்தளம்பல்களுக்காக ரூபா 12.65 மில்லியனும், மேலதிகப் பணிகளுக்காக ரூபா 18.81 மில்லியனும் உள்ளங்கலாக ரூபா 112.60 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதத்தினை விஞ்சிய விலைத் தளம்பல்கள் மற்றும் மேலதிக வேலைகளுக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் எஞ்சிய பணத்துக்காக முறையே ரூபா 25.00 மில்லியன் மற்றும் ரூபா 10.00 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந்த நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் நடவடிக்கைகள் முழுமையாக கைவிடப்பட்டிருந்தன.

### 3.14.2 கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் 07 மாடிகளைக் கொண்ட நோயாளர் விடுதிக் கட்டிடத் தொகுதியொன்றினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 398 மில்லியனாக இருந்த போதிலும், அமைச்சரவையின் பெறுகைகள் குழுவிற்கு பதிலாக அமைச்சின் பெறுகைகள் குழுவினால் ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மொத்தக் கிரய மதீப்பீடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 10 வருடக்காலப்பகுதியினுள் உள்நாட்டு நிதியத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 736 மில்லியனாக இருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், தாமதக் காலம் 08 வருடங்களாகியிருந்தது. அறிக்கையிடப்பட்டிருந்ததன் பிரகாரம் அத்திகதி வரையிலும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே ரூபா 508.6 மில்லியன் மற்றும் 69 சதவீதம் மாத்திரமே ஆகும்.

(ஈ)07 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை 08 மாடிகள் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடொன்றினை தயாரிப்பதற்கு அல்லது உரிய பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது ஒப்பந்ததாரருடன் திருத்தியமைக்கப்பட்ட உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒப்பந்ததாரர் பணிகளை இடைநிறுத்தியிருந்த போதிலும் ரூபா 51 மில்லியன் தொகையான முற்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இந்த அறிக்கை திகதியளவில் ரூபா 43 மில்லியன் கிரயமான உபகரணங்கள் 02 வருடங்களாக செயற்பாடற்று வேலைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்தன.

### 3.14.3 கொழும்பு பல் மருத்துவமனை கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மொத்தக்கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அமைச்சின் பெறுகைகள் குழுவிற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் ஆகக் குறைந்தது 05 அங்கத்தவர்கள் இருக்க வேண்டுமெனினும், இந்த கொள்வனவில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மூன்று பேரை மாத்திரம் கொண்டிருந்தது.

(இ) அத்திவாரமிடுவதற்காக நிலத்தினை துளையிடல் மற்றும் கட்டிடத்தின் நிர்மாணித்தல் ஆகியன இரு கொள்வனவுகளாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் நடைமுறையை பின்பற்றாமல் பொறியியலாளரின் மதிப்பீட்டில் 8 சதவீதமான மதியுரைப்படிகளை செலுத்தும் அடிப்படையில் நிலத்தினை துளையிடல் பணியின் மதியுரையாளராக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 1.01 மில்லியன் மதியுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ)நிலத்தை துளையிடல் பணியின் ஆரம்பக்கிரய மதிப்பீடு ரூபா 69.84 மில்லியனாக இருந்த போதிலும், ஒப்பந்த பெறுமதி ரூபா 39.69 மில்லியன் ஆகும். பணியினை நிறைவு செய்வதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 39.11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொறியியலாளரின் மதீப்பீடானது மிகை மதிப்பீடு என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தால் ரூபா

694.12 மில்லியனுக்கு தயாரிக்கப்பட்டிருந்த பொறியியலாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணியினை கையளிக்கப்பட்ட நிர்மாணத்தின் அடிப்படையில் அந்த பணியகத்திற்கு கையளிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன், அத்திகதி வரையிலும் ரூபா 557.77 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்துடன் அமைச்சு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேலும் மதியுரையாளரால் முன்வைக்கப்பட்டிருந்த நிதி முன்மொழிவின் பிரகாரம் 18 மாதங்களில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட வேண்டுமெனினும், அதற்காக ஒப்பந்தக் கையளிப்புக் கடிதத்தின் மூலம் 36 மாதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(எ) நிலத்தை துளையிடல் பணியின் ஆரம்ப கிரய மதிப்பீடு ரூபா 69.84 மில்லியனாக இருந்த போதிலும், ஒப்பந்தப்பெறுமதி ரூபா 39.69 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான பொறியியலாளர் மதிப்பீடு மிகை மதிப்பீடொன்று என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) ஒப்பந்தக் கையளிப்பு கடிதத்தின் பிரகாரம் 2014 மார்ச் 31 ஆந் திகதி அளவில் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எனினும், 2016 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தாமதக்காலம் 02 வருடங்களும் 04 மாதங்களுமாகும். அந்த தாமதம் காரணமாக மானியமாக கிடைத்த மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 108.25 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டன. அவ்வாறே அவற்றின் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது.

(ஐ) உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் கொழும்பு தந்தநாயக்க கட்டிடத்தை திறந்து வைத்தல் அவசர தேவைப்பாடொன்றாக கருதி ரூபா 5.04 மில்லியன் செலவிடப்பட்டு 05 Syringe pump மற்றும் 02 operation theater lamps மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 07 உபகரணங்களுக்காக ரூபா 2.97 மில்லியன் ஆகக்குறைந்த விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளரின் உபகரணங்கள் அனைத்து அமைப்புக்குறிப்பீடு தேவைப்பாடுகளுடனும் இணங்குவதாக உறுதி செய்யப்பட்டுள்ள போது கையிருப்பினை மாத்திரம் கருத்திற்கொண்டு ஆகக்குறைந்த விலைக்கேள்வி மறுக்கப்பட்டு ஏழாவது ஆகக்குறைந்த விலைக்கேள்வியாளரிடமிருந்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 2.07 மில்லியன் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**3.14.4 சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு புதிய நோயாளர் விடுதிக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்.**

---

2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 03 வருடக் காலப்பகுதியினுள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 115.00 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றுள் ரூபா 96.00 மில்லியன் அல்லது மொத்த நிதியேற்பாட்டின் 84 சதவீதம் 03 வருடக் காலப்பகுதியினுள் ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் முன் பெறுகை நடவடிக்கைகளுக்கு மூன்று வருட காலம் எடுத்திருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு தவறியிருந்தது.

**3.14.5 மருத்துவ விநியோக பிரிவிற்காக வெலிசர சுவாசநோய் மருத்துவமனை வளாகத்தில் மருந்துக் களஞ்சியமொன்றினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

வெலிசர சுவாசநோய் மருத்துவமனை வளாகத்தினுள் மருத்துவ விநியோகப் பிரிவிற்காக மருந்துக் களஞ்சியமொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது அதன் மதியுரைச் சேவை நிறுவனமாக அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் நியமிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்பாட்டிற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 10.00 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 6.66 மில்லியன் செலவிடப்பட்டு காணியைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டின் போது நிதியேற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முடியாது போயிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாதாந்தம் ரூபா 762,856 வீதம் 18 மாதங்களுக்காக ரூபா 13.73 மில்லியன் செலவிடப்பட்டு களஞ்சியமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

**3.15 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

**(அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

அமைச்சின் நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகிச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், தெரிவுப் பரிசோதனைகளில் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) அமைச்சின் கீழ் எடுக்கப்படாத மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையமொன்றின் அனைத்து பராமரிப்பு செலவினங்களும் அமைச்சினால் பல வருடங்களாக செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மாத்திரம் அதற்காக 10.92 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2014 ஒக்தோபர் 25 ஆந் திகதிய அமப/14/1407/509/064 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த நிலையத்தினை மீள் கட்டமைப்பு செய்து சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமாக பாராளுமன்றச்சட்டமொன்றின் மூலம் தாபிப்பதற்கு அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அந் நிறுவனத்தினை மீள் கட்டமைக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மருத்துவமனை அல்லது மருத்துவ நிலையமொன்றுக்கு மருந்துகளை விநியோகிப்பதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைக்கு முரணாக செயற்பட்டு வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத, பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் தாபிக்கப்பட்டிருந்த மருத்துவ நிலையத்திற்கு 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 33.43 மில்லியன் பெறுமதியான மருந்துப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் இந்த மருந்துப் பொருட்களின் இருப்பு பொருட்பதிவேட்டில் பதியப்பட்டிராததுடன், வழங்கல்கள் மற்றும் பெற்றுக்கொள்ளல் மருந்தாளர்களுடாக இடம்பெற்றிருக்கவில்லை. வழங்கப்பட்டிருந்த பெரும்பாலான மருந்து வகைகள் மருந்துப்பொருள் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தனியார் சுகாதார சேவைகள் கண்காணிப்புச் சபை தொடர்பான அவதானிப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) தனியார் மருத்துவ நிறுவனங்களின் (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கான கண்காணிப்பு ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்தது. பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களால் பேணிச் செல்லப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணித்தல் இந்த ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள பணியாகும். அதன் பிரகாரம் தற்போது பேணிச் செல்லப்படும் நியமங்களை மீளாய்வு செய்யும் முறைமையொன்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் கையளிக்கப்படுகின்ற அல்லது வழங்கப்படுகின்ற நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் சேவைகளின் தரத்தினை உறுதி செய்தல், அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களாலும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது ஆகக் குறைந்த தகைமைகளை கொண்டிருப்பதனை சான்றுபடுத்தல் மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் போது ஆகக் குறைந்த நியமங்களை பின்பற்றுவதனை கண்காணித்தல் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணியொன்றாக இருந்தது. அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பின்பற்றப்பட வேண்டிய பின்வரும் நடைமுறைகள் அல்லது செயல்நடைமுறைகள் தொடர்பில் கட்டளைகளை தயாரிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கான பிரபல்யப்படுத்தும் முன்மொழிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தல்.
- தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது மற்றும் பதிவினைப் புதுப்பிக்கும் போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களால் இணங்கிச் செயற்பட வேண்டிய மேவுகை ஆலோசனைகளைத் தயாரித்தல்.
- தொடர்புடைய அல்லது அதிருப்தியடைந்த நபரொருவரால் ஏதேனுமொரு தனியார் மருத்துவ நிறுவனமொன்றிற்கு அல்லது அது தொடர்பில் நபரொருவருக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனுமொரு முறைப்பாட்டினை கையேற்றல் மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக அகற்றுதல்.

(iii) அதிகாரச்சட்டத்தின் 2 (1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 2007 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 1,747 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அந்த எண்ணிக்கை 787 வரை கிரமமாக குறைவடைந்திருந்தது. எனினும் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கு, பதிவு செய்வதற்கு மற்றும் பதிவு செய்யப்பட்டிராத நிறுவனங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பகுதியின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் முறையான நடைமுறையொன்று சபையினால் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2011 ஆம் ஆண்டு முதல் இந்த சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சுகாதார அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அயடீன் குறைப்பாட்டு நோயினைத் தடுப்பது தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்திற்கு யப்பான் அரசிடமிருந்து ரூபா 5.95 மில்லியன் தொகையான வெகுமதியொன்றான உப்பில் அயடீன் சேர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் 850 கிலோகிராம் பொட்டாசியம் அயடெட் நாடெங்கிலும் உள்ள அயடீன் கலந்த உப்பு உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பெறப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் 850 கிலோ கிராம் அளவான பொட்டாசியம் அயடெட் இருப்புப் பெறுமதி லங்கா உப்புக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த பொட்டாசியம் அயடெட்டின் பெறுமதி சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதாக லங்க உப்புக் கம்பனியின் பொது முகாமையாளர் இணங்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளரால் 2016 யூலை 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் குறித்த அயடீன் தொகையை லங்கா உப்பு கம்பனிக்கு கையளித்து வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்த பணத்தை உப்புக் கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.17 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் செயல் நடைமுறையிலிருந்து விலகுதல்.

மொனராகல மாவட்ட மருத்துவமனையால் மீளாய்வாண்டின் போது ரூபா 2.79 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு 20 மடி கணனிகளும் ரூபா 1.16 மில்லியன் செலவில் 10 மேசைக் கணனிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 41 இன் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல், மற்றும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பிராந்திய பெறுகைகள் குழுவொன்றிற்கு சந்தை விலை ஒப்பீட்டு முறையில் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய ஆகக்கூடிய எல்லை ரூபா 1 மில்லியனாக இருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி 2.79 மில்லியன் செலவிடப்பட்டு 20 மடி கணனிகள் மற்றும் ரூபா 1.16 மில்லியன் செலவிடப்பட்டு 10 மேசைக் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.10.1 ஆம் வழிகாட்டலுக்கமைய ஒப்பந்ததாரர்களின் பின்புலத் தகைமைகள் பரீசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முகவரிகள், வியாபாரப் பதிவுச்சான்றிதழ், விலைக்கேள்விக்கான கோருதல் கடிதம், விலைக்கேள்வி மற்றும் விலைப்பட்டியல்கள் ஆகியவற்றில் போலியான கையொப்பமிட்டு கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றிருந்தது. உறுதிச்சீட்டில் பெயர் குறிப்பிட்டுள்ள வழங்குநருக்குப் பதிலாக வேறொரு நபரின் பெயருக்கு காசோலை வரையப்பட்டிருந்தது. 20 மடி கணனிகளுக்காக 02 வருடங்களும், 10 மேசைக் கணனிகளுக்கு 03 வருட உத்தரவாதக் காலத்தினை பெற்றுத்தருவதாக விலைக்கேள்வியில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உத்தரவாதச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகாரச்சபையின் பதிவுச்சான்றிதழ் பெறப்பட்டிருக்காத Ambulatory Blood

Pressure Monitoring System 02 மற்றும் ENT Work Station 01 ஆகியன முறையே ரூபா 2.15 மில்லியன் மற்றும் ரூபா 36.75 மில்லியன் செலவிடப்பட்டு ரிட்ச்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 05 Pediatric OT Table இற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 ஆம் வழிகாட்டலுக்கமைய ரூபா 2.62 மில்லியன் செயலாற்றல் பிணையொன்று பெறப்பட வேண்டுமெனினும், அதற்காக ரூபா 1.42 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணையொன்று பெறப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் கீழான மருத்துவமனைகளில் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அனைத்து மருத்துவமனை பணிப்பாளர்களுக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு முகவரியிடப்பட்ட 2011 ஒக்தோபர் 03 ஆந் திகதிய இலக்கம் தெளிவாக குறிப்பிடப்படாத சுகாதார அமைச்சின் செயலாளரின் கடிதமொன்றின் மூலம் அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களிலும் நடாத்திச் செல்லப்படும் அனைத்து சிற்றுண்டிச்சாலைகளுக்கும் விலைக்கேள்வி கோரப்பட்டு பொருத்தமான ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக 15 மருத்துவமனைகளுக்குரிய 41 சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திச் செல்வதற்காக மருத்துவமனை பதவியணியினரின் நலன்புரி சங்கம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி நலன்புரி சங்கம் ஆகியவற்றிற்கு விலைக்கேள்வி கோரப்படாமல் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. குறித்த நிறுவனத்தின் தலைவர்கள் மற்றும் அங்குள்ள நலன்புரி சங்கங்களுக்கிடையே எதுவித எழுத்து மூலமான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் இரு மருத்துவமனைகளின் பதவியணியினருக்கான நலன்புரிச் சங்கங்களில் இரு சிற்றுண்டிச்சாலைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக அரசாங்கத்திற்கு 11.52 மில்லியன் வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. மேலும் நலன்புரி சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 27 சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து எதுவித வாடகையும் அரசாங்கத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சிற்றுண்டிச்சாலைகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்திற்கு கிடைத்திருந்த வருமானம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும் 06 மருத்துவமனைகளில் 7 சிற்றுண்டிச்சாலைகள் விலைக்கேள்வி கோரப்பட்டு தனியார் துறைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்கத்திற்கு நிலையாக இருந்த வாடகை, குத்தகை, நீர் மற்றும் மின்சார கட்டணம் மற்றும் தண்டப்பணங்களாக ரூபா 48.22 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) முறையான அங்கீகாரமொன்றில்லாது 2012 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்வதற்கு மருத்துவமனையின் நிர்வாக உத்தியோகத்தரால் இடமளிக்கப்பட்டிருந்த அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான சிற்றுண்டிச்சாலையின் வாடகையாக ரூபா 18.00 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. அந்த

நிலுவை வாடகையினை அறவிடுவதற்கு அமைச்சின் விசேட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு கட்டளையிட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 08 ஆந் திகதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) சுத்திகரிக்கும் பிரிவின் நிலுவைக் கொடுப்பனவுகளை செலுத்துதல்**

2010 ஆம் ஆண்டின் போது அரசினால் சுத்திகரிப்பு சேவைப் பணியின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2011 சனவரி மாதம் முதல் 2012 மார்ச் மாதத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மொனராகலை மாவட்ட அரச மருத்துவமனையின் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொண்டிருந்த தனியார் நிறுவனமொன்றிற்கு 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் நிலுவை சுத்திகரிப்பு கட்டணங்களாக ரூபா 3.89 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த கொடுப்பனவுகளுக்காக அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2010 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 1668/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், நிலுவைச் சம்பளத்தை செலுத்துவதற்கு முன்னர் அதிகரிக்கப்பட்ட சம்பளம் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதும், அந்த கூடுதலான சம்பளத்திற்குரிய ஊழியர் நலன்புரி நிதிய பங்களிப்புகள் செலுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த தனியார் நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருந்த 2011 ஆம் ஆண்டு முதல் எதுவிதமான பங்களிப்புப் பணத்தையும் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு செலுத்தியிருக்கவில்லை.

## 3.18 நட்டங்களும் சேதங்களும் இழப்புக்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு

(அ) சுகாதார அமைச்சு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சுடன் இணைந்ததாக அந்த பதவியணியை ஒரு இடத்திற்கு கொண்டு வரும் பிரதான நோக்கில் 2015 யூன் 08 ஆம் திகதி கொழும்பு - 10, ரீ.பீ.ஜாயா மாவத்தையின் 464 ஆம் இலக்கம் கொண்ட இடத்தில் அமைந்துள்ள கட்டிடம் மாதாந்தம் ரூபா 9,000,000 செலுத்தும் அடிப்படையில் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையை கைச்சாத்திடவதற்கு முன்னர் கட்டிடம் தொடர்பான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அபாய எச்சரிக்கை சமிக்ஞை முறைமையொன்று செயற்படாதிருப்பதும், மின்தூக்கிகள் அடிக்கடி செயலிழப்பதாகவும், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட வாயு மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் நியமத்தை விஞ்சிய அதிகமான காபன் டயோக்சைட் மற்றும் புற்றுநோயினை உண்டாக்கும் (போமெல்டீஹயியட்) வாயுவுடன் கூடிய கட்டிடமொன்று என்பது பின்னர் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி 2015 யூன் 08 ஆந் திகதியாக இருந்த போதிலும், 2015 மே 01 ஆந் திகதியிலிருந்து வாடகை செலுத்தப்பட்டிருந்தமையால் 01 மாதம் மற்றும் 08 நாட்களுக்காக ரூபா 11,539,726 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மருத்துவமனைகள் மற்றும் 06 நிறுவனங்களில் இடம்பெற்றிருந்த ரூபா 111.49 மில்லியனான நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் கணக்குகளில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) தேவைப்பாடு மற்றும் அளவு தொடர்பில் போதியளவு ஆராய்ச்சியொன்றினை மேற்கொள்ளாமல் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனைக்காக கொள்வனவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராத ரூபா 2.50 மில்லியன் பெறுமதியான

உயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் காலாவதியாகியிருந்தன. எனினும் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் நட்டத்தினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த வேண்டுகோள் திறைசேரியால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணம் 101 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஏற்பட்டிருந்த நட்டத்தினை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் களஞ்சியப் பற்றாக்குறைகள் மற்றும் கொள்வனவுகளிலான வழுக்களாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 29.57 மில்லியன் தொகையினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த வேண்டுகோள் திறைசேரியால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 செப்தம்பர் 30 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரை ஐக்கிய இராட்சியத்தில் நடைபெற்ற தென்னாபிரிக்க மற்றும் ஆகிய பசுபிக் வலய மலேரியா தடுப்பு அரசியல் தலைவர்களின் நிரந்தர நிதி மாநாட்டிற்கு பங்குபற்றுமாறு மற்றும் இடைத்தர வகுப்பிலான விமானப்பயணச்சீட்டு உள்ளடங்கலாக மாநாட்டுக் காலத்தினுள் வசதிகளை வழங்குவதாக குறிப்பிட்டு மான்புமிகு சுகாதாரம், போசணை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சருக்கு மாத்திரம் அழைப்பொன்று விடுக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டில் ரூபா 842,200 செலவிடப்பட்டு ஒவ்வொன்றும் ரூபா 421,000 தொகையான இரண்டு வியாபார வகுப்பு விமானப் பிரயாணச் சீட்டுக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு விமானப் பிரயாணச்சீட்டுக்களும் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் செலுத்திய பணத்தில் ரூபா 809,490 மாத்திரம் 2016 சனவரி 29 ஆந் திகதி மீள அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 32,710 தொகையான நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஊ) 2015 செப்தம்பர் 7 ஆந் திகதி முதல் 2015 செப்தம்பர் 11 ஆந் திகதி வரை கிழக்குத் தீமோரில் நடாத்தப்பட்டிருந்த உலக சுகாதார அமைப்பின் 68 ஆவது வலய மாநாட்டிற்கு பங்குபற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த இரு உத்தியோகத்தர்கள் சுற்றுலாவில் பங்குபற்றியிருக்கவில்லை. எனினும் விமானப் பயணச்சீட்டிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 518,200 தொகையினை மீள அறவிடுவதற்கு 2016 திசெம்பர் 08 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.19 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சீர்செய்யப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2007 | 6.6(உ)xiii | மருந்துகளைப் கொண்டு செல்லும் போது ஏற்பட்டிருந்த மோசடியான ரூபா 10 மில்லியன் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும், 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.20 சூழல் கட்டமைப்பிற்கு ஏற்படும் சேதங்கள்

03 மருத்துவமனைகளில் செயற்பாட்டிலுள்ள சாக்கடை குழாய் கட்டமைப்பு உரிய முறையில் செயற்படாமையால் உரிய நேரத்தில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் 12 மருத்துவமனைகளின் கழிவுநீரினை சுத்திகரிப்பதற்காக இடப்படும் இரசாயனப் பொருளின் பயன்பாடு தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 10 மருத்துவமனைகளின் சாக்கடைக்குழாய்க் கட்டமைப்பின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு குறிப்பாக இனங்காணப்பட்ட பதவியொன்று இல்லாதிருந்ததுடன், 12 மருத்துமனைகளில் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு குறிப்பானதொரு நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தில் 23 ஆம் பகுதியின் பிரகாரம் வெளியேற்றப்படும் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினை 10 மருத்துவமனைகளும் பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம், அனேகமான மருத்துவமனைகளில் சாக்கடைக்குழாய் கட்டமைப்புக்களை முறையாக பேணாமையின் காரணத்தால் அவற்றின் கழிவுப்பொருட்களை சுற்றாடலுக்கு வெளியேற்றுகின்றமையால் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

### 3.21 போலியான மற்றும் தரத்தில் குறைவான வாசனைப் பூச்சு உற்பத்திகளை இறக்குமதி செய்தல்

1980 இன் 27 ஆம் இலக்க பூச்சுகள். உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களை பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்தை இரத்துச் செய்து, 2015 யூலை 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துப்பொருட்கள் கண்காணிப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. மருந்துப்பொருட்கள் அல்லாத பூச்சுக்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதி தொடர்பில் இரத்துச் செய்யப்பட்ட அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகள் புதிய அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2015 யூலை 01 ஆந் திகதி ஆரம்பமாகிய 06 மாதக் காலப்பகுதியினுள் மாத்திரம் 3,296 சந்தர்ப்பங்களில் ரூபா 2,922.94 மில்லியன் தொகையான பெறுமதி மதிப்பிட முடியாத அளவிலான வாசனைப் பூச்சுக்களின் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்படி குறிப்பிடப்பட்டவாறு சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லாதிருந்தமையின் காரணத்தால், அந்த இறக்குமதிகள் தொடர்பில் முறையான கண்காணிப்பொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் அடிப்படையில் போலியானதும் தரம் குறைவானதுமான வாசனைப் பூச்சுக்களை இறக்குமதி செய்தல் மற்றும் அவற்றின் பாவனையால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சுகாதார அச்சுறுத்தல்கள் தொடர்பில் முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 3.22 வெளிநாடு சென்றுள்ள மருத்துவர்கள் மீள சேவைக்கு அறிக்கையிடாமை

நிபுணத்துவ மருத்துவப் பயிற்சிக்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறையினைப் பெற்றிருந்த 56 மருத்துவர்கள் பயிற்சியினை பூர்த்தி செய்த பின் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் சம்பளமற்ற கல்விசார்/கல்விசாரா விடுமுறைகளைப் பெற்று 64 மருத்துவர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். அந்த மருத்துவர்கள் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்களை மீறி மீண்டும் சேவைக்கு திரும்பாமையின் காரணத்தால் ரூபா 118.44 மில்லியன் அமைச்சினால் அந்த மருத்துவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் உள்ளவாறு அவற்றுள் 44 சதவீதம் அல்லது ரூபா 52.32 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 3.05 மில்லியன் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. மேலும் நிபுணத்துவ மருத்துவப் பயிற்சியின் பின்னர் சேவைக்கு அறிக்கையிடாத மருத்துவர்களுக்கு சேவையை விட்டுச்செல்லும் அறிவித்தல்கள் உரிய காலப்பகுதியினுள் வழங்கப்பட்டிராமை மற்றும் சம்பளத்தை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்காமை போன்றவற்றின் காரணத்தால் 10 மருத்துவர்களுக்கு சம்பளமாக ரூபா 4.25 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. 14 மருத்துவர்களின் தகவல்கள் அமைச்சினால் நாளதுவரையாக பேணப்பட்டிராமையால்

அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5.04 மில்லியன் முறிகளின் பெறுமதி அறவிடப்பட முடியாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தது. அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அல்லது தூதுரகங்களூடாக உரிய தகவல்களை தேடியறிவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.23 மருந்துப் பொருட்கள், அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்கள் போன்ற மருத்துவ வழங்கள்கள் தொடர்பான அவதானிப்புக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்துப் பொருட் பட்டியல் மீளாய்வுக் குழுவினால் பரிந்துரை செய்யப்படாத மருந்து வழங்கல்களை கொள்வனவு செய்யக்கூடாதென அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும் அந்தக் குழுவின் பரிந்துரை கிடைக்கப்பெற்றிராத 4,555 மருந்துப்பொருள் உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் மருந்துப்பொருட்கள் உள்ளடங்கலாக 16,446 மருத்துவ வழங்கல் விடயங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் 12,227 விடயங்கள் மதிப்பிடப்பட்ட விடயங்களாக (Estimated Items) இனங்காணப்பட்டிருந்தன. அவற்றின் வருடாந்த தேவைப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு உலகலாவிய விநியோகஸ்தரிடம் கொள்வனவு செய்வதற்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகளை அனுப்புவதற்கும், 4,219 விடயங்களின் மதிப்பிடப்படாத விடயங்களாக (Non-Estimated Items) இனங்கண்டு வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்யாமல் தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் உள்நாட்டில் கொள்வனவு செய்தல் அமைச்சின் கொள்கையாக இருந்தது. மதிப்பீடு செய்யப்படாத விடயங்களினுள் மதிப்பீடு செய்யக்கூடிய விலை கூடிய விடயங்கள் காணப்பட்டதுடன், மதிப்பீடு செய்யப்படாமையின் காரணத்தால் அந்த விடயங்கள் போட்டியிலிருந்து விலகி கூடிய விலைக்கு உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு மதிப்பீடு செய்யப்படாத 10 மாதிரி விடயங்களை பரிசோதனை செய்த போது, அவற்றுள் 7 விடயங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 யூன் மாதம் வரையிலும் 243 சந்தர்ப்பங்களில் ரூபா 168.35 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை கொள்வனவு செய்வதற்காக 11 மாதங்கள் கொண்ட விநியோகக் காலத்துடன் கட்டளைகள் வழங்கப்படுதல் கொள்கையொன்றாகும். எனினும், மீளாய்வாண்டிற்குரியதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டளைகளின் எண்ணிக்கையின் 55 சதவீதத்திற்குரிய மருத்துவ வழங்கல்கள் உரிய காலப்பகுதியினுள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் அமைச்சின் பெறுகைகள் குழு மற்றும் அமைச்சரவையின் பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் அனுப்பப்பட்டிருந்த மொத்தம் 69 கோவைகளிடையே 45 கோவைகள் கொண்ட மாதிரியொன்றை பரிசோதனை செய்த போது 28 கோவைகளுக்குரிய கொள்வனவு நடவடிக்கைகளுக்காக 07 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தது. கொள்வனவு கால அட்டவணையின் பிரகாரம் செயற்படாமை இந்த தாமதத்திற்கு காரணமாக அமைந்திருந்தது.

(உ) கொள்வனவு நடவடிக்கைகள் தாமதமடைவதை குறைப்பதற்காக பின்வரும் பொருண்மையானதும் பொருத்தமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) மருத்துவ வழங்கல்கள், விநியோகத்திற்கு எடுக்கும் காலம் (Lead Time) ஆகியவற்றை குறைப்பதற்காக மீள் கட்டளை இருப்பு மட்டத்தை

அடிப்படையாகக் கொண்ட கட்டளையிடல் நடைமுறையொன்றினை அமுல்படுத்தல்.

(ii) அமைச்சின் பெறுகைகள் குழு மற்றும் அமைச்சரவையின் பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் அனுப்பப்பட்டிருந்த கோவைகளுக்கு உரிய நடவடிக்கைகளை பெறுகைகள் திட்டமொன்றின் பிரகாரம் செயற்திறனாக நடைமுறைப்படுத்தல்.

(iii) மேற்பார்வை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும், முறையாக பொறுப்புக்களை கையளித்தலும்,

(iv) மருத்துவ விநியோகப் பிரிவின் அங்கீகாரமின்றி விநியோக கால அட்டவணைக்கு (Delivery Schedule) முரணாக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் வழங்கு பொருட்களை கட்டுப்படுத்தல் மற்றும் ஏற்படும் தாமதத்திற்காக அவர்களுக்கு செலுத்தும் 10 சதவீதக் கட்டணத்தில் மிகை அறவீடொன்றினை மேற்கொள்ளல்.

(ஊ) இந்த தாமதம் காரணமாக ஒவ்வொரு ஆண்டிலும் மிகவும் கூடுதலான கிரயத்துடன் கூடிய மருத்துவ வழங்கல் பொருட்களை உள்நாட்டு சந்தைகளில் கொள்வனவு செய்ய நேர்ந்திருந்ததுடன், மீளாய்வாண்டில் மாத்திரம் உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருத்துவ வழங்கல் பொருட்களில் மொத்தக் கிரயம் ரூபா 4,310.27 மில்லியன் ஆகும்.

(எ) மருத்துவ வழங்கல் பொருட்களை உள்நாட்டு சந்தைகளில் கொள்வனவு செய்ய நேர்கின்றமையால் 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் செலவிடுவதற்கு நேர்ந்திருந்த மேலதிக கிரயம் ரூபா 4,875.71 மில்லியன் ஆகும். அவற்றுள் சில மருந்து வகைகளின் உள்நாட்டு சந்தை விலையானது அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் விலையை விட அசாதாரணமான மடங்கினால் அதிகரித்திருந்தது. அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம், மருத்துவ விநியோகப் பிரிவு உள்நாட்டு சந்தைகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது செலவிடுவதற்கு நேர்கின்ற மேலதிக கிரயத்தினை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன் போது வழங்குநரின் தாமதத்தின் காரணமாக உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்ய நேருமாயின் செலவிடப்படும் மேலதிக கிரயத்தினை உரிய வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்காக வழங்குநரின் செயலாற்றல் பிணைப்பொறுப்பு இரத்தாவதற்கு முன்னர் அல்லது நாயணக்கடித பிடிகாசு செலுத்தப்படுவதற்கு முன்னர் குறித்த தகவல்கள் முகாமைத்துவத்தால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஏ) கொள்வனவு செய்யப்படுகின்ற மருத்துவ வழங்கல் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதும் உடனடியாக தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. தரம் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமையொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 233.87 மில்லியன் பெறுமதியான மருந்துப்பொருட்கள் தரத்தில் குறைவானதாக காணப்பட்டன.

(ஐ) 2015 ஆம் ஆண்டின் போது தரமற்ற மருந்துப் பொருட்களை பாவனையிலிருந்து அகற்றுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும், ரூபா 163.96 மில்லியன் கிரயமான மருந்துப்பொருட்கள் நோயாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றால் நோயாளிகளுக்கு ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தரப்பரிசோதனைக்காக நீண்ட காலம் எடுத்தமையின் காரணத்தால் சில மருந்துப்பொருட்கள் காலாவதியாகியிருந்தன.

(ஒ) தரம் நிராகரிக்கப்பட்ட மருந்துப்பொருட்களின் கிரயம் மற்றும் கிரயத்தில் 25 சதவீதமான நிர்வாக செலவினத்தை வழங்குநர்களிடமிருந்து அறவிடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும், 2011 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தரம் நிராகரிக்கப்பட்ட மருந்துப்பொருட்களின் மொத்த கிரயம் ரூபா 2,772.4 மில்லியனில் ரூபா 301.4 மில்லியன் மாத்திரம் மருந்துப்பொருட்கள் விநியோகப் பிரிவினால் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது வழங்குநர்களிடமிருந்து ரூபா 188 மில்லியனை மாத்திரம் அறவிட்டிருந்தது. மருந்துப்பொருள் களஞ்சியங்கள் மற்றும் அவற்றை கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் உரிய நியமத்தரத்தில் இல்லாதிருந்தமையால், மருந்துப் பொருட்கள் நாட்டினுள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தரமிழப்பதாக வழங்குநரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அதன் காரணத்தால் எஞ்சிய பெறுமதியை குறித்த வழங்குநரிடமிருந்து அறவிட முடியாது போயிருந்தது.

(ஒ) மருந்துப்பொருட்களின் தரத்தினை பாதுகாப்பதற்காக காற்றோட்டமானதும் சூரிய ஒளி கிடைக்கக்கூடியவாறும் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட வேண்டியதுடன், களஞ்சியத்தை நிர்ணயிக்கப்பட்ட வெப்ப நிலையில் பேண வேண்டும். எனினும், மருந்துப் பொருட்கள் வழங்கல் பிரிவின் வளாகத்தில் அமைந்துள்ள 03 களஞ்சியங்களில் 25-30 பாகை செல்சியஸிற்கு இடைப்பட்ட வெப்பத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய ரூபா 84.41 மில்லியன் கிரயமான மருந்துப்பொருட்கள், 32-35 பாகை செல்சியஸ் இற்கு இடைப்பட்ட வெப்பத்துடன் கூடிய அறைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாக 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

(ஔ) பெரும்பாலான மருந்துக் களஞ்சியங்களில் போதியளவிலான இடவசதி இல்லாதிருந்தமையால் பெருந்தொகை பெறுமதியான மருந்து விநியோக போக்குவரத்து சேவைகள் வழங்குநரால் கையேற்கப்படாமல் களஞ்சியத்தின் முன்னாலுள்ள நடைபாதையில் வைக்கப்பட்டிருந்தது. இடவசதி கிடைத்த பின்னர் அவை களஞ்சியங்களுக்கு பொறுப்பேற்கப்பட்டு பொருள் பெறுவதற்கான குறிப்பு வழங்கப்பட்டிந்தது. களஞ்சிய பொறுப்பாளரால் கையேற்கப்பட்ட மற்றும் கையேற்கப்படாத ரூபா 61.09 மில்லியன் கிரயமான இருப்புக்கள் களஞ்சியத்தின் முன்னால் உள்ள நடைபாதைகளில் வைக்கப்பட்டுள்ளதாக 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டது.

(க) தேசிய ஔடதங்கள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தின் அடிப்படை வசதிகள் மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்திருந்த மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 410 மில்லியனுடனான ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டமானது அமைச்சினால் 2009 ஒக்தோபர் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதன் நிதிசார் செயன்முன்னேற்றமானது ரூபா 132 மில்லியன் மாத்திரமேயாகும். கடந்த நான்கு ஆண்டுகளினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகூடப் பரிசோதனைகளின் அளவின் பிரகாரம் ஐந்தாண்டு திட்டத்தில் ஆய்வுகூட வசதிகளில் முன்னேற்றமொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(கா) மருந்துப்பொருட்கள் முகாமைத்துவ கைநூலின் பிரகாரம் செயற்திறனான இருப்புப் கட்டுப்பாடொன்றிற்காக மருந்துப்பொருட்கள் வழங்கல் பிரிவினால் 03 மாதங்களுக்கான பாதுகாப்பு இருப்பு மட்டமொன்றினை வைத்திருக்க வேண்டுமெனினும், 2016 மார்ச் 31 ஆந் திகதி 03 மாதங்களுக்கான இருப்பு மட்டத் தேவையினை பூர்த்தி செய்திராத 645 மருந்து வழங்கல் வகைகள் காணப்பட்டன.

(கி) மருந்துப்பொருட்கள் முகாமைத்துவ கைநூலின் பிரகாரம், பதவிநிலை உத்தியோகத்தரொருவால் மருந்துப்பொருட்களை காலரீதியாக பரிசோதனை

செய்வதற்கு மேலதிகமாக மருந்துப்பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் கணக்கு வைத்தலிலான சரியான தன்மை பரிதோதனைகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எனினும் அமைச்சின் களஞ்சிய மதிப்பாய்வு பிரிவினால் நடாத்தப்படும் வருடாந்த இருப்பு கணப்பீடு தவிர வேறு எந்தவிதமான பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கீ) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமான 27 களஞ்சியக் கட்டிடத் தொகுதிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள சாதாரணப் பெறுமதி ரூபா 10,094.60 மில்லியன் அளவிலான இருப்புக்களின் பாதுகாப்பு தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கொட்டிகாவத்த களஞ்சியம் நீங்கலாக ஏனைய களஞ்சியங்கள் தொடர்பில் தீ மற்றும் களவு போதல் நட்டம் போன்ற விபத்துக்களால் ஏற்படக்கூடிய சேதங்கள் தொடர்பில் காப்பீடு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காகவும், 2016 ஏப்ரல் 07 ஆந் திகதியளவில் மருத்துவ வழங்கல் பிரிவினுள் அமைந்துள்ள களஞ்சியங்களில் செயலற்றுப் போயிருந்த தீ விபத்து சமிக்ஞை கட்டமைப்புக்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியங்களில் 1988 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 42.67 மில்லியன் தொகையான இருப்புப் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 101, 104 மற்றும் 109 இன் பிரகாரம் முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தால் அந்த பற்றாக்குறையினை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட முடியாது போயிருந்தது.

(கூ) மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் விநியோகிக்கப்படுகின்ற மருந்துப்பொருள் வழங்கல் கொள்கலன்களில் அரச இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது கட்டளையிடப்பட்ட நிபந்தனையொன்றாவதுடன், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றுமாகும். எனினும், அரச இலட்சிணை பொறிக்கப்பட்டிராத ரூபா 60.74 மில்லியன் கிரயமான 06 மருந்துப்பொருள் வழங்கல் விடயங்கள் களஞ்சியங்களில் காணப்பட்டமை தெரிவுப் பரிசோதனையொன்றின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(கெ) 1990 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 170.66 மில்லியன் பெறுமதியான காலாவதியான 387 வகையான மருந்துப்பொருள் வழங்கல்கள் 2012 ஆம் ஆண்டின் போது கைத்தவிர்க்கப்பட்டிருந்தன. எனினும் அந்த மருந்துப்பொருள் வழங்கல்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்குரிய அதிகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் பின் காலாவதியான மருந்துப்பொருட்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் தரவுகள் ஆகியவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு மருந்து வழங்கல்கள் பிரிவு தவறியிருந்தது. மேலும் அமைச்சின் கீழுள்ள 57 மருத்துவமனைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 16 மருத்துவமனைகளுக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 50.28 மில்லியன் கிரயமான காலாவதியான மருந்துப்பொருட்கள் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

(கே) 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகாரச்சபை அதிகாரச்சட்டத்தின் மூலம் நியாயமான விலைக்கு சுகாதார மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்கு பொருந்தும் பக்கவிளைவுகளற்ற மற்றும் உயர் தரத்திலான மருந்துப்பொருட்களை மாத்திரம் கொள்வனவு செய்தல் நோக்கமாகியிருந்தது. அதன் பிரகாரம், வழங்குநரால் சமர்ப்பிக்கப்படும் மருத்துவ வழங்கல்களின் தரத்தினை பரிசோதனை செய்ததன் பின்னர் அந்த வழங்குநர்கள் மற்றும் அவர்களின் மருத்துவ வழங்கல்களை பதிவு செய்வதற்கு 2015 யூலை 01 ஆந் திகதிக்கு முன்னர் பூச்சுக்கள், உபகரணங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகாரசபை எனும் பெயரில் இனங்காணப்படுகின்ற தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த பதிவினைப் பெற்றிராத மருத்துவ வழங்கல் பொருட்கள் உள்நாட்டு சந்தையின்

வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 242.67 மில்லியன் கிரயமான அவ்வாறான கொள்வனவுகளுக்காக தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகாரசபையினால் எதிர்ப்பு தெரிவிக்காத 108 கடிதங்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக வெளியிடப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக அவ்வாறு எதிர்ப்பு தெரிவிக்காத 457 கடிதங்கள் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்காகவும் வெளியிடப்பட்டிருந்தன. மேலும் அவ்வாறான 769 கடிதங்கள் வேறு நிறுவனங்களுக்காகவும் வெளியிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தரம் தொடர்பான உறுதிப்பாடொன்று இல்லாத மருத்துவ வழங்கல்கள் நாட்டினுள் கொண்டுவரப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

(கை) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு முன்வைக்கப்பட்ட கட்டளைகளுக்குரிய இருப்புக்கட்டளை நடைமுறையிலான தாமதத்தின் காரணத்தால், மருந்துப் பொருட்கள் மற்றும் இரசாயனப்பொருட்களின் பற்றாக்குறையை தடுப்பதற்காக ஒரே மருந்துப்பொருள் அல்லது இரசாயனப்பொருள் அண்மிய மாதங்களில் பல தடவைகள் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 719.90 மில்லியன் கிரயமான 08 மருந்து மற்றும் இரசாயனப் பொருட்கள் அண்மிய மாதங்களில் 03 முதல் 06 வரையான சந்தர்ப்பங்களில் உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையும், அவற்றுள் 04 விடயங்களுக்காக ரூபா 53.62 மில்லியன் மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பு கிடைத்தலிலான தாமதத்தின் காரணமாக ஏற்படும் மேலதிக கிரயத்தினை வழங்குநரிடமிருந்து அறவிடும் நடைமுறையொன்று காணப்பட்ட போதிலும், இருப்புக் கட்டளையிடல் முறைமையின் தாமதத்தின் காரணமாக ஏற்படும் மேலதிக செலவினத்தை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான வழிமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(கொ) மீளாய்வாண்டின் போது மருத்துவ வழங்கல் பிரிவில் இருப்பு பற்றாக்குறை ஏற்படும் சந்தர்ப்பங்களில் 33 மருத்துமனைகளின் பெறுகைகள் குழுவினால் ரூபா 6.92 மில்லியன் கிரயமான மதிப்பீடு செய்யப்படாத மருந்துப்பொருட்கள் உள்ளடங்கலான ரூபா 157.19 மில்லியன் கிரயமான மருந்துப்பொருள் வகைகள் உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த கொள்வனவுகளுக்குரிய மேலதிகக்கிரயம் கணிப்பீடு செய்யப்பட்டு அதனை அறவிடுவதற்கான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் அண்மிய நாட்களில் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஒரே மருந்து பல்வேறு விலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், சில சந்தர்ப்பங்களில் அரச செலவில் கொள்வனவு செய்யப்பட்டிராமையால் மேலதிக செலவினமொன்று ஏற்பட்டிருந்தது.

(கோ) மருத்துவ வழங்கல் முகாமைத்துவ நடைமுறையை மிகவும் உயரிய மட்டத்தில் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும், அரச மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துப்பொருட்களை தொடர்ந்து விநயோகிப்பதற்கும் தேவையான மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பொன்று (MSMIS) 2008 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதற்காக ரூபா 182.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு தீர்க்கப்பட்ட வரவுக் கட்டளை பெறுமதியினை இந்த தரவுக் கட்டமைப்பினூடாக பெற்றுக்கொள்ள முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(கௌ) மேற்படி கணனிக் கட்டமைப்பின் மூலம் ஒவ்வொரு மருத்துவ வழங்கல்களுக்குரிய வருடாந்த தேவைப்பாட்டினை திட்டமிடல், கட்டளையிடல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகிய ஒட்டுமொத்த செயன்முறையும் உரிய பணிப் பகிர்ந்தளிப்பின்றி ஒரு இருப்புக் கட்டுப்பாட்டாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ச) 2015 ஆம் ஆண்டிற்கு தேவையாக இருந்த உள்நாட்டின் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் அறுவைசிகிச்சை கை கவசங்களின் வழங்கலுக்காக தெரிவு

செய்யப்பட்டிருந்த வழங்குநருக்கு கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தை நீடிப்பு செய்யாதிருக்கவும், 2015 ஆம் ஆண்டிற்கான அறுவைச்சிகிச்சை கை கவசங்களுக்கான மொத்த தேவைப்பாட்டினையும் திறந்த போட்டி விலைக்கேள்வி கோரி கொள்வனவு செய்வதற்கும், அறுவைச்சிகிச்சை கை கவசங்களுக்கான பற்றாக்குறையொன்று ஏற்படுமாயின் அதனை தடுப்பதற்காக 2015 ஆம் ஆண்டிற்கான தோவைப்பாட்டில் 25 சதவீதத்தை தற்போதைய வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும், மீளாய்வாண்டின் போது அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ள அளவில் 25 சதவீதம் தற்போதைய வழங்குநரிடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டிய எஞ்சிய 75 சதவீதமான அளவினைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 கை கவசங்களின் பாதுகாப்பு இருப்பு உள்ளடங்கலாக ஒட்டுமொத்த இருப்பும் முடிவடைந்திருந்ததுடன், 2016 சனவரி மாதமளவில் 08 பிரதான மருத்துவமனைகளில் கை கவசங்களின் பாரதூரமான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக 03 மாதங்களுக்கான கை கவசங்களின் தேவைப்பாட்டிற்காக அவசர கொள்வனவாக ரூபா 334 மில்லியன் செலவிடப்பட்டு கை கவசங்களின் இருப்பொன்று 2016 ஆம் ஆண்டின் முதல் 06 மாதக் காலப்பகுதியினுள் பிராந்திய அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சரவையால் ஒப்பந்தம் நீடிப்பு செய்யப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்த வழங்குநரிடமிருந்தே அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த கை கவசங்களின் இருப்பு முடிவடைந்த மருத்துவமனைகளால் பிராந்திய அடிப்படையில் கை கவசங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மருத்துவ வழங்கல் பிரிவினால் ரூபா 35.26 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த அறுவைச்சிகிச்சை கைக் கவசங்களின் சோடியொன்று காசல் வீதியின் மகளிர் மருத்துவமனையால் ஒவ்வொன்றும் ரூபா 57.23 வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.24 மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பான அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்து அரச மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களுக்கான மருத்துவமனைகளின் ஒட்டுமொத்த தேவைப்பாடும் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரே தடவையில் கொள்வனவு செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ள முடியும் எனினும், அதற்காக அந்தந்த மருத்துவமனைகளுக்கு நிதியேற்பாடுகளை வழங்கி பிராந்திய பெறுகைகள் குழுவினால் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்ய இடமளிக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 05 வருடக் காலப்பகுதியினுள் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒட்டுமொத்த நிதியேற்பாடான ரூபா 11,440 மில்லியனில் ரூபா 5,224 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மருத்துவமனைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக ICU Ventilators (Adult & Pediatric) 64 இனை வழங்கி பொருத்தி பராமரித்துச் செல்வதற்கான வழங்குநரைத் தெரிவு செய்யும் போது முதலாவது ஆகக் குறைந்த விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளரால் தொழில்நுட்ப குறிப்புரைகளின் (Technical Specification) தீர்மானமான தேவைப்பாடுகளாக (''C''/Critical Requirements) குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் ஒன்றை அல்லது பலவற்றை பூர்த்தி செய்திருக்காமை அல்லது பெறுகைகள் ஆவணங்களில் (Tender Document) குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கேள்வியாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் (Instructions to Bidders (ITB Clauses)) மீறப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்திக் கொள்ளாமல் முதலாவது ஆகக்குறைந்த விலைக்கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது. சட்டரீதியற்ற மற்றும்

அடிப்படையொன்றாக எடுக்க முடியாத அறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் 07 அங்கத்தவர்களில் 03 பேர் அந்த பரிந்துரைகளுக்கு இணங்கியிருக்கவில்லை. முதலாவது ஆகக் குறைந்த விலையினை விட ரூபா 23.4 மில்லியன் கூடுதலாக விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டாவது ஆகக்குறைந்த விலையுடனான விலைக்கேள்வியாளருக்கு ஒப்பந்தத்தை கையளிக்கும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாக அவதானிக்கப்பட்டது.

(இ) ICU Ventilators (Neonatal) 18 இனை பெற்றுக்கொள்ளும் கொள்வனவின் போது பெறுகைகள் வழிகாட்டலின் 2.8.3 இனை மீறும் வகையில் அமைச்சின் பெறுகைகள் குழுவிற்கான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு 05 அங்கத்தவர்களை நியமிப்பதற்குப் பதிலாக 03 அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் பெறுகைகள் வழிகாட்டிகளான 6.3.6 மற்றும் 6.3.7 ஆகியவற்றை மீறும் வகையில் விலைக்கேள்வியினை திறக்கும் நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டு, விலைக்கேள்வியினை திறக்கும் குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பமிட்டு தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழுவின் தலைவருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. தீர்மானமிக்க (Critical) 64 அளவுக்குறிப்பீடுகளில் ஒரு அளவுக்குறிப்பீட்டினை மாத்திரம் பூர்த்தி செய்திராத ரூபா 42,951,240 ஆன ஆகக்குறைந்த விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளருக்கு பாதகமான முறையிலும் தீர்மானமிக்க (Critical) இரு அளவுக்குறிப்பீடுகளை பூர்த்தி செய்திராத ரூபா 44,010,000 ஆன இரண்டாவது ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளருக்கு நலன் ஏற்படும் வகையிலும் பக்கச்சார்பாகவும் தொழில்நுட்ப மற்றும் அளவுக்குறிப்பீடுகள் போன்றவை தொடர்பில் மதிப்பாய்வொன்றினை மேற்கொண்டு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தலைவரால் இரண்டாவது ஆகக்குறைந்த விலைக்கேள்வியாளருக்கு ஒப்பந்தத்தை கையளிக்குமாறு பரிந்துரை செய்வதற்கு பக்கச்சார்பாக செயற்பட்டிருந்தார். தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தலைவரின் பரிந்துரைக்கமைய செயற்பட்டு சேவைகள் மற்றும் பராமரிப்பு பெறுமதியில் 10 சதவீதமான ரூபா 1,107,000 ஆன கழிவொன்றின் கீழ் இரண்டாவது ஆகக் குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளருக்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு அமைச்சின் பெறுகைகள் குழுவினால் 2016 மே 18 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்ததெனினும், கழிவினைப் பெற்று ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு தீர்மானம் எடுப்பதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரம் கிடைத்த விதமானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியாளருக்கு பெறுகையினை கையளிப்பதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படவுள்ள நட்டம் ரூபா 1,058,760 ஆகும். அதற்கு மேலதிகமாக சேவைகள் மற்றும் பராமரிப்பு கிரயத்தினால் ஏற்படவுள்ள நட்டம் ரூபா 5,643,000 ஆகும்.

## 3.25 நிதி மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 செப்தம்பர் 7 ஆந் திகதி முதல் 2015 செப்தம்பர் 11 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் டிலீ திமோர் லெசாதோ இராச்சியத்தில் (கிழக்குத் தீமோர்) நடைபெற்ற 68 ஆவது உலக சுகாதார அமைப்பின் வலய மாநாட்டில் பங்குபற்றுவதற்கு விருப்பத்தெரிவினை முன்வைத்திருந்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் அந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நாட்டிலிருந்து சென்றிருக்கவில்லை என்பது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், வெளிநாட்டு பிரயாணத்திற்காக அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 392,995 தொகையான படிகளை மீள செலுத்துவதற்கு அந்த உத்தியோகத்தரால்

நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அமைச்சினாலும் அந்த தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூன் 29 ஆந் திகதி முதல் 2015 யூலை 2 ஆந் திகதி வரை உலக வங்கியின் தென்கிழக்காசிய வலய அலுவலகத்தின் மூலம் இந்தியாவின் புது டில்லியில் நடாத்தப்பட்ட உலக சுகாதார அமைப்பின் கூட்டமொன்றிற்கும் 2015 யூலை 3 ஆந் திகதி நடாத்தப்பட்ட மற்றுமொரு கூட்டத்தில் பங்குபற்றியிருந்த பிரதி பணிப்பளர் நாயகத்திற்கு (திட்டமிடல்) உலக சுகாதார அமைப்பினால் கூட்டிணைந்த படிகள் செலுத்தப்பட்டுள்ளபோது அமைச்சினாலும் கூட்டிணைந்த படிகளாக ரூபா 329,664 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 21 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 28 ஆந் திகதி வரை பீஜீங் தலைநகரில் நடாத்தப்பட்டிருந்த இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக உணவு மற்றும் குடிபானம், தங்குமிடம் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான செலவினம் சீன பல்கலைக்கழகமொன்றினால் ஏற்கப்படுவதாக குறித்த அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அந்த பயிற்சியில் பங்குபற்றியிருந்த அமைச்சின் மேலதிக செயலாளர் (ஒழுங்கமைப்பு) இற்கு கூட்டிணைந்த படிகளாக ரூபா 162,998 செலுத்தப்பட்டிருந்தது.

**3.26 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13,950 | 12,091 | 1,946 | 87 |
| (ii) | மூன்றாம் நிலை | 31,067 | 26,636 | 4,445 | 14 |
| (iii) | இரண்டாம் நிலை | 5,106 | 3,817 | 1,292 | 3 |
| (iv) | ஆரம்பத் நிலை | 28,766 | 25,321 | 9,059 | 5,614 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 1,296 | - | 1,296 |
| | மொத்தம் | 78,889 | 69,161 | 16,742 | 7,014 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அங்கீகரித்த பதவியணியை விஞ்சி 7,014 ஊழியர்களை இணைத்துக்கொண்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த மிகையினுள் 86 நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களும், 5,567 சுகாதார உதவிப் பணியாளர்களும் இருந்தனர்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் 56 ஊழியர்களும் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 1,296 ஊழயர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(iii) அமைச்சின் கீழுள்ள நகரை அண்மித்த 24 மருத்துவமனைகள் மற்றும் 02 நிறுவனங்களில் மருத்துவ நிபுணர்களின் மிகையானது 172 ஆக இருந்ததுடன், அந்த மிகை 01 முதல் 25 வரையான வீச்சில் காணப்பட்டது. அவ்வாறே 09 மருத்துவமனைகளிலும் 09 நிறுவனங்களிலும் நிலவிய மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறை 86 ஆகும்.

(iv) அமைச்சின் கீழ் காணப்படும் 75 மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களின் மருத்துவ உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையான 1,772 மற்றும் 16 மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களிலுள்ள மிகையின் எண்ணிக்கை 178 ஆகும். அநுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம் போன்ற கஷ்டப்பிரதேச மாவட்டங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளின் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 26 முதல் 113 இற்கு இடைப்பட்டிருந்தது. எனினும், கொழும்பு, கண்டி, மற்றும் குரநாகல் மாவட்டங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளின் மிகை மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 9 முதல் 52 இற்கு இடைப்பட்டதாக இருந்தது.

(v) சிரேஷ்ட நிலையிலான வெற்றிடங்களினுள் 10 கணக்காளர்கள், 13 உயிரியல் மருத்துவ பொறியியலாளர்கள், 14 பல் மருத்துவர்கள் மற்றும் 13 மருந்துக் கலப்பவர்களும் அடங்குவர்.

(vi) அமைச்சின் பல்வேறு நிர்வாக நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 30 ஆக இருந்தபோதிலும், மிகையான 57 மருத்துவர்கள் போதியளவான பணிக்கையளிப்பொன்றில்லாமல் அமைச்சின் பல்வேறு பிரிவுகளில் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். அதனுள் 09 மருத்துவ உத்தியோகத்தர்களினால் பல்வேறு மருத்துவமனைகளிலிருந்து சம்பளங்களைப் பெற்றிருந்த போதிலும் அந்த மருத்துவமனைகளில் சேவையாற்றியிருக்கவில்லை.

(vii) மருத்துவ உத்தியோகதர்களின் வெற்றிடங்களின் காரணமாக, 15 மாவட்டங்களுக்குரிய 11 பிராந்திய மருத்துவமனைகள் மற்றும் 30 முதல்நிலை சிகிச்சை அலகுகள் 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி வரையிலும் மூடப்பட்டிருந்தன.

(viii) அரச சேவைகள் ஆணைக்குழவின் அங்கீகாரமொன்று இல்லாமல் அமைச்சின் தலைமை சட்ட உத்தியோகத்தர் பதவி சட்ட உத்தியோகத்தர் சேவையில் iii ஆம் தரத்தின் பெண் உத்தியோகத்தரொருவர் 2013 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நிறைவேற்றுநர் சேவைத்தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியின் ii ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தார். அத்திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்த மாதாந்த சம்பளம் ரூபா 33,255 இற்கு பதிலாக ரூபா 38,075 தொகையான மாதாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ix) மருத்துவ வழங்கல் முகாமைத்துவம் மற்றும் நிர்மாணத்திற்காக 2008 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த கணனிக் கட்டமைப்பில் அனைத்து செயற்பாடுகளினதும் அதிகாரம் பெற்ற மற்றும் பயிற்சி பெற்ற ஒரே உத்தியோகத்தரான பிரதி பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) மீளாய்வாண்டில் ஓய்வு பெற்றிருந்தார். எனினும் அந்த பதவிக்காக தகுதியுடைய உத்தியோகத்தரொருவரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் ஒய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் அந்த பதவிக்கு மீளவும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார்

(x) மருத்துவ வழங்கல் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட உதவிப்பணிப்பாளர் பதவியின் 07 வெற்றிடங்கள் மற்றும் மருத்துவ விநியோக உதவியாளர், பாரந்தூக்கி இயக்குநர்கள், பொதியிடுபவர்கள் மற்றும் களஞ்சிய உதவியாளர் ஆகிய பதவிகளின் 56 வெற்றிடங்களை நிரப்பாமை மருத்துவ வழங்கல் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் களஞ்சியப்படுத்தலினான செயற்திறனின்மைக்கு தாக்கமளித்திருந்தது.

**(ஆ) நிறுவகக் கட்டமைப்பில் பதவிகளின் ஒழுங்கமைப்பு**

-----------------------------------------------------------------------------------

தயாரிக்கப்பட்டிருந்த நிறுவனக் கட்டமைப்பில் பதவிகளின் ஒழுங்கமைப்பு முறைப்படி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் வளாகத்தினுள் 90 பல்வேறு பிரிவுகள் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரிவுகளுக்கிடையே உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்தல் மற்றும் உத்தியோகத்தர்களிடையே பணிகளை பகிர்ந்தளித்தல் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பிரிவுகளுக்கிடையேயான உள்ளக தொடர்பு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. கொள்வனவு நடவடிக்கைகள் நீண்ட தாமதங்களுக்கு உள்ளாகுதல், அந்தந்த பிரிவுகளில் காணப்பட வேண்டிய தரவுகளை பேணியிராமை, சுகாதார பதவியணியினை நியமித்தல், இணைப்புச் செய்தல், இடமாற்றங்கள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்நிலமைகள் பாததூரமாக தாக்கமளித்திருந்தது.